# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102062

1. District : மாவட்டம் Trichy
   PS: காவல்நிலையம் VVAC Trichy
   Year: ஆண்டு 2018
   FIR No.: மு.த.அ. எண் 01/2018
   Date: நாள் 26.01.2018

2. (i) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d) of PC Act.
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 25.01.2018
   Date from : நாள் முதல் 25.01.2018
   Date to : நாள் வரை 25.01.2018
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் 13.15hrs
   Time to : நேரம் வரை 1830hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.01.2018
   Time நேரம் : 1000hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.01.2018
   Time நேரம் : 1000hrs to 1100hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 50 Kms தென்மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், Old no: 58/4 B2, New No: 14/2, மேலசாத்தப்பாளையம், [illegible], திருச்சி Dt.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. சுந்தரராஜன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சுப்ரமணியன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.07.1972
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் மாவட்ட [illegible] ஆய்வுக்குழு அலுவலர்
   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   — பின் பக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை —

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

—

10. **Total value of properties stolen / involved :** —
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. **Inquest Report / Un-natural death Case No. if any:** —
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காலம் 7–இல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

(1) திரு.சுந்தர்ராஜ், வயது.41/18, த/பெ.லெட்சுமணன், எண்.4, பரிசல்துறை ரோடு, முசிறி, திருச்சி மாவட்டம்.
(2) திரு.கார்த்திக்ராஜன், வயது.31/18, த/பெ.ஆனந்தன், கண்டியூர், வதியம் அஞ்சல், கரூர் மாவட்டம்.
(3) திரு.பெரியசாமி, வயது.70/18, த/பெ.தங்கராஜ், புதுத்தெரு, முசிறி, திருச்சி மாவட்டம்.
(4) திரு.மார்ட்டின், வயது.48/18, த/பெ.லடிஸ்ராஜ், எண்.32, பழையக்கோவில் தெரு, பாலக்கரை, திருச்சி–1.
(5) திரு.முத்துக்குமார், வயது.33/18, த/பெ.ஜெயப்பிரகாசம், எண்.3/47, குடித்தெரு, தா.பேட்டை ரோடு, தும்பலம் அஞ்சல், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
(6) திரு.அருண்குமார், வயது.24/18, த/பெ.வெங்கடாச்சலம், எண்.125, மேற்கு சின்னக்குளம் தெரு, சேந்தமங்கலம், நாமக்கல்.
(7) திரு.பழனிச்சாமி, வயது.28/18, த/பெ.பொன்னம்பலம், எண்.15பி, துறையூர் ரோடு, முசிறி, திருச்சி மாவட்டம்.
(8) திருமதி.கலைச்செல்வி, வயது.42/18, க/பெ.சுரேஷ்குமார் / த/பெ.பெரியண்ணன், அ1 உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், முசிறி, திருச்சி மாவட்டம்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.**

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் IY. M. Navaneethakrishnan பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு Insp. G. Pubic, VAC, Trichy காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

Insp. G. Pubic. VAC, Trichy

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

[signature] 26/01/2018

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**
[signature] 26/1/18

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**
26.01.2018/11.30 hrs

Name: பெயர் P. Arulsethu
Rank: நிலை .................... No. எண் ..........
Insp. G. Pubic, VAC, Trichy

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.01/2018ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **26.01.2018** காலை **10.00** மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.சத்யநாராயணயன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சி மாவட்டம் என்பவர் ஆஜராகி **25.01.2018**ம் தேதி முசிறி மோட்டார் வாகன பகுதி அலுவலர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறையுடன், மேற்படி திடீர் சோதனை செயல்முறையின்படி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மேற்படி அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறை விபரங்கள் பின்வருமாறு: அனுப்புநர் சு.சத்யநாராயணன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி . . . ***** திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், **25.01.2018**ம் தேதி, காலை சுமார் **11.00** மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் அலுவல் சாட்சி திரு.பொ.கா.கணேசமூர்த்தி, வயது.**55/2018**, த/பெ.காமாட்சி, வருவாய் ஆய்வாளர், நங்கவரம் பகுதி, குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம் ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சி மாவட்டம், முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலர் அலுவலகத்தில் **13.15** மணி முதல் **18.30** மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது ரூ.**2,58,500/–** கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் **25.01.2018**ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, Sd.....26/1/2018 (சு.சத்யநாராயணன்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சி. **<u>Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy.</u>**Received this report at 10.00 hours on 26.01.2018 and registered a case in Trichy V&AC Cr.No.01/2018 u/s 102 Cr.P.C and 13(2) r/w 13(1)(d) of the PC Act 1988 at 11.00 hrs on 26.01.2018.(Sd) P.Arul Jothi, 26.01.2018 (P.ARULJOTHI) Inspector of Police, V&AC, Trichy. திடீர் சோதனை செயல்முறைகள் இன்று **25.01.2018** மதியம் சுமார் **13.45** மணிக்கு திருச்சி மாவட்டம், முசிறியில் முசிறி–சேலம் புறவழிச்சாலையில் மேலச்சந்தபாளையம் பழைய எண்.**58/4**பி2, புதுஎண்.**14/2–**இல், என்கிற முகவரியில் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள வாடகை

கட்டிடத்தில் முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை திரு.சு.சத்யநாராயணன், வயது.46/2018,த/பெ.சுப்ரமணியன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி, திரு.பொ.கா.கணேசமூர்த்தி, வயது.55/2018, த/பெ.காமாட்சி, வருவாய் ஆய்வாளர், நங்கவரம் பகுதி, குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம் மற்றும் திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி மற்றும் அவர்களது குழுவினர் உதவியுடன், திருச்சி, ஊ.த.க. பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கு.ராமச்சந்திரன் அவர்களின் மேற்பார்வையில் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள்.

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப் பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும் அதில் அவர்களும் பயன் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 25.01.2018 மதியம் 13.15 மணிக்கு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி அலுவலகமானது திருச்சி மாவட்டம், முசிறி புதிய பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கு–மேற்காக செல்லும் சேலம் மெயின்ரோட்டில் (மேலசந்தபாளையத்தில்) ரமேஷ் இன்டஸ்ட்ரீஸ் என்கிற கட்டிடத்தின் எதிர்புறும் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், திரு.கிருஷ்ணமூர்த்தி, த/பெ.அண்ணாவி என்பவருக்கு சொந்தமான பழைய எண்.58/4பி2, புது எண்.14/2 முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகம் தரைத்தளம் மற்றும் முதல் தளம் என இரண்டு தளங்கள் உள்ள கட்டிடமாகும். மேற்படி அலுவலக கட்டித்தின் வடக்கே முசிறி–சேலம் செல்லும் தார் சாலை கிழமேற்காக செல்கிறது. கிழக்கே இந்தியன் ஆயில் டீலர் ஜெயராஜ் ஏஜென்சிக்கு சொந்தமான காலியிடமும், தெற்கு மற்றும் மேற்கு பக்கம் காலி வீட்டு மனைகளும் அமைந்துள்ளது. மேற்படி அலுவலக கட்டிடத்தின் பிரதான நுழைவாயில் வடக்கு பார்த்து அமைந்துள்ளது. கட்டிட்த்தின் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகள் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. முதல் தளத்தில் எல்காட் புகைப்படம் எடுக்கும் அறையும், பதிவேடுகள் அறையும் அமைந்துள்ளது.

மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தில் முதலாவதாக பிரதான நுழைவாயிலும், அதற்கு தென்புறம் சிறிய பகுதியும், அதனை அடுத்து தென்புறம் பெரிய ஹாலும், மேற்படி ஹாலிற்கு வடமேற்கு புறம் கிழக்கு பார்த்து வாசலுடன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையும், அறைக்கு

தெற்கு புறம், கிழக்கு பார்த்த வாசலுடன் கணிணி இயக்குபவர் அறையும், மேற்படி ஹாலிற்கு தெற்குபுறம் பதிவறையும், அந்த அறை வழியாக கிழக்கு பக்கம் செல்லும் வாசல் ஒன்றும் அமைந்துள்ளது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் பின்னர் கேட்டறிந்த திரு.முரளி, த/பெ.தங்கராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) அவர்கள் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தனர். அவரது அறையின் வாசலுக்கு அருகே வெளியே ஹாலில் மேலும் இரண்டு நபர்களும், மேற்படி ஹாலில் மத்திய கிழக்கு பகுதியின் ஜன்னல் ஓரமாக அ–1 இருக்கை உதவியாளர் திருமதி.கலைச்செல்வி, வயது.42/18, க/பெ.சுரேஷ்குமார் / த/பெ.பெரியண்ணன் என்பவர் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே ஒரு வயதான நபரும், அதே ஹாலில் மேலும் இரண்டு நபர்களும் நின்று கொண்டிருந்தனர். மேற்படி கணினி அறையில் கணினி இயக்குபவர் திருமதி.மைதிலி, வயது.30/18, க/பெ.சீனிவாசன் / த/பெ.மோகன்ராஜ் என்பவர் அமர்ந்திருந்தார்,

அங்கிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது கூடி ஏழு தனிநபர்களும் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டு நழுவ முயற்சித்தார்கள். அவர்களை நிறுத்தி அவ்வலுவலகத்திற்குள் அவர்கள் வந்த விபரத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தனித்தனியாக விசாரித்தபோது கூடி ஏழு நபர்களும் அவர்களுடைய தனிப்பட்ட சொந்தப்பணி ஏதும் இல்லாமல் உள்ளே வந்திருக்கும் விபரமும், அவர்கள் அலுவலகத்திற்குள் அந்த நோத்தில், அங்கு வந்ததற்கான சரியான காரணம் எதுவும், யாரும் சொல்லாததால், அவர்களை தனித்தனியே விசாரிக்க அவர்கள் கீழே கண்டவாறு இரண்டு பிரிவாக பணம் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பெயர்/ முகவரி | சரியான விளக்கம் சொல்லாமல் வைக்கப்பட்டிருந்த பணம் / கையூட்டாக பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்று சந்தேகத்திற்குட்பட்ட பணம் வைத்திருந்த இடம் | சொந்தப்பணம் என்று தெரிவித்த பணம் இருந்த இடம் |
|---|---|---|---|
| 1 | திரு.சுந்தர்ராஜ், வயது.41/18,<br>த/பெ.லெட்சுமணன்,<br>(தனிநபர் / இடைத்தரகர்),<br>எண்.4, பரிசல்துரை ரோடு, முசிறி. | ரூ.1,45,000/–<br>(வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில்) | ரூ.220/– மேல்சட்டையின் இடது மேல் வெளிப்புற பாக்கெட்டில். |
| 2 | திரு.கார்த்திர்ராஜன், வயது.31/18,<br>த/பெ.ஆனந்தன்,<br>(தனிநபர் / இடைத்தாகர்),<br>கண்டியூர், வதியம் அஞ்சல்,<br>கரூர் மாவட்டம். | ரூ.80,000/– பேண்டின் வலது பாக்கெட்டில். | ரூ.1,500/–<br>மேல்சட்டையின் வெளிப்புற மேல் இடது பாக்கெட்டில். |

| | | | |
|---|---|---|---|
| 3 | திரு.பெரியசாமி, வயது.70/18, த/பெ.தங்கராஜ், (தனிநபர் / இடைத்தரகர்), புதுத்தெரு, முசிறி, திருச்சி மாவட்டம். | ரூ.15,500/– சட்டைக்குள் அணிந்திருந்த பனியனுக்குள். | ரூ.460/– மேல்சட்டையின் வெளிப்புற மேல் இடது பாக்கெட்டில். |
| 4 | திரு.மார்ட்டின், வயது.48/18, த/பெ.லடிஸ்ராஜ், (தனிநபர்/இடைத்தரகர்), எண்.32, பழையக்கோவில் தெரு, பாலக்கரை, திருச்சி–1 | ரூ.7,500/– மேல் சட்டையில் இடது உள்புற பாக்கெட்டில். | ரூ.400/– மேல்சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட். |
| 5. | திரு.முத்துக்குமார், வயது.33/18, த/பெ.ஜெயப்பிரகாசம், (தனிநபர்/இடைத்தரகர்), எண்.3/47, குடித்தெரு, தா.பேட்டை ரோடு, தும்பலம் அஞ்சல், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ.2,000/– பேண்டின் வலது புற பாக்கெட்டில். | ரூ.460/– மேல்சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட். |
| 6. | திரு.அருண்குமார், வயது.24/18, த/பெ.வெங்கடாச்சலம், (தனிநபர்/இடைத்தரகர்), எண்.125, மேற்கு சின்னக்குளம் தெரு, சேந்தமங்கலம், நாமக்கல். | ரூ.2,000/– பேண்டின் இடது புற பாக்கெட்டில். | ரூ.260/– மேல்சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட். |
| 7. | திரு.பழனிச்சாமி, வயது.28/18, த/பெ.பொன்னம்பலம், (தனிநபர்/இடைத்தரகர்), எண்.15பி, துறையூர் ரோடு, முசிறி, திருச்சி மாவட்டம். | ரூ.4,500/– மேல் சட்டையில் இடது உள்புற பாக்கெட்டில். | ரூ.200/– மேல்சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட். |
| | மொத்தம் | ரூ.2,56,500/– | ரூ.3,500/– |

மேலே அட்டவணையில் கண்ட வரிசை எண் 1 முதல் 7 வரையிலான தனி நபர்கள் / இடைத்தரகர்களிடமும் உள்ள சொந்த பணம் தவிர, அவர்கள் வைத்திருந்த மற்ற பணம் பற்றி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களை தனித்தனியே விசாரிக்க, அவர்கள் சரியான விளக்கம் சொல்லாமல், மவுனமாக இருந்தனர். ஆகையால், மேற்படி பணம், முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக, யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூ.2,56,500/–ஐ திருச்சி, ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலே அட்டவனையில் கண்ட 1 முதல் 7 வரையிலான தனி நபர்கள் தனியாக வைத்திருந்த மேற்படி மொத்த பணம் ரூ.3,500/– தங்களுடைய செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று சொன்னதால் அந்த பணம் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும், கணினி அறைக்குள் இருந்த கணினி இயக்குபவர் திருமதி.மைதிலி என்பவரிடம் இருந்த பணம் ரூ.1,340/– பற்றியும், முதல் தளத்தில் எல்காட் அறையிலிருந்த திரு.யசோதா கிருஷ்ணன், வயது.40/18, த/பெ.ராமசாமி, எண்.25, சுவேதகிரி நகர், திருவெள்ளரை, மண்ணச்சநல்லூர் தாலுக்கா என்பவரிடமிருந்த பணம் ரூ.780/– பற்றியும் அவர்களிடம் கேட்க, அவர்கள் அப்பணம் தங்களது சொந்தப் பணம் என்று சொன்னதால், அப்பணத்தை அவரவர்களையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது.

அதனை அடுத்து இவ்வலுவலகத்தில் அரசு கட்டணம் வசூல் செய்வதற்காக தரைத்தளத்தில் அமர்ந்திருந்த அ1 இருக்கை உதவியாளர் திருமதி.கலைச்செல்வி என்பவரிடம், இன்றைய தினம் (25.01.2018) வசூல் செய்த அரசு கட்டணங்கள் விபரங்களை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து தரும்படியும், பதிவேடுகளில் எழுதி குறிப்பிட்டுள்ள விபரங்களை தெரிவிக்கும்படியும் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலரால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி மேற்படி திருமதி.கலைச்செல்வி இன்றைய தினம் ரொக்கமாக வசூல் செய்த விபரங்கள் என, ஆன்லைன் பேமெண்ட் ரூ.50,140/–, ஆப்லைன் பேமெண்ட் ரூ.1,39,575/– என தனித்தனியாக கணினியில் பிரிண்ட் எடுத்துக்கொடுத்தார். அந்த விபரங்களை வசூல் செய்த பணத்துடன் ஒப்பிட்டுப் பார்கையில் ஆன்லைன் பேமெண்ட் ரூ.50,140/– சரியாக இருந்தது, ஆப்லைன் பேமெண்ட் ரூ.1,39,575/–க்கு பதில் ரூ.2,000/– கூடுதலாக ரூ.1,41,575/– பணம் இருந்தது. மேற்படி கூடுதலாக இருந்த பணம் ரூ.2,000/– பற்றி கேட்டபோது, எந்தவித விளக்கமும் சொல்லாமல் மவுனமாக தலையை குனிந்தபடி இருந்தார். மேற்படி பணம் ரூ.2,000/– யார் யாரிடமாவது கையூட்டாக . பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.2,000/– திருச்சி, ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும், 24.01.2018–ஆம் தேதியன்று மொத்தம் ரூ.25,790/– தொகைக்குரிய வரைவோலைகள் 6 எண்ணிக்கையுடையதும், 25.01.2018–ஆம் தேதியன்று மொத்தம் ரூ.6,07,378/– தொகைக்குரிய வரைவோலைகள் 7 எண்ணிக்கையுடையது தொடர்பான கணினி பதிவுகளை பதிவிறக்கம் செய்து, மேற்படி திருமதி.கலைச்செல்வி ஆஜர் செய்தார். மேற்படி வரைவோலைகள் சரியாக இருந்தது. மேலும், தொழிலாளர் நல நிதியாக 1 சதவீதம் வரியாக 2018 ஜனவரி 2 ஆம் தேதி முதல் 24.01.2018 வரை வசூல் செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ.11,460/– ரொக்கப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த தொகை மேற்படி உதவியாளரிடம் உள்ள தொகையுடன் சரிபார்த்ததில் சரியாக இருந்தது. அதேபோல், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைக்காக அரசு உத்தரவுபடி 22.09.2017 முதல் 11.01.2018 வரை (வரவு பற்றுச் சீட்டு வரிசை எண்.91701 முதல் 91725 வரையுள்ள வரவு பற்றுச் சீட்டுப் புத்தகத்தில்) வரிசை எண். 91701 முதல் 91704 வரை மட்டும் முறையே ரூ.240/– வீதம் மொத்தம் ரூ.960/– மட்டும் வசூல்

செய்யப்பட்டு ரசீது புத்தகம் மட்டும் உள்ளது. இந்த வசூல் தொடர்பாக பதிவேடு எதுவும் பராமரிக்கப்படவில்லை என தெரிவித்தனர். மேற்படி பணம் ரூ.960/– ரொக்கமாக மேற்படி உதவியாளரிடம் சரியாக இருந்தது. மேற்கண்டவாறு இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ள அரசு கட்டணம் ரொக்கம் மற்றும் வரைவோலைகள் ஆகியவற்றை சோதனையின்போது ஆஜரிலிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி அவர்களிடம் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் மற்றும் குழுவினர் மூலமாக ஒப்படைக்கப்பட்டு, மேற்கண்டவற்றை அரசுக் கணக்கில் செலுத்த அறிவுறுத்தி அவர்களிடம் தனித்தனியாக ஒப்புதல் பெறப்பட்டது. அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட கீழ்கண்ட 5 ஆவணங்கள் மேற்படி காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

1. Unit office Musiri Cashier (P.Kalaiselvi) Transaction summary for the period 25.01.2018 (on line) for Rs.50,140/- (2 Pgs).
2. Unit office, Musiri Headwise Cash Collection for the period 25.01.2018 for Rs.1,39,575/- (off line) (2 Pgs).
3. Regional Transport office, Unit office Musiri DD/Cheque collection date:24.01.2018, 6 Nos. for Rs.25,790/- (2 Pgs).
4. Regional Transport office, Unit office Musiri DD/Cheque collection date:25.01.2018, 7 Nos. for Rs.6,07,378/-(2 Pgs).
5. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை வரவு பற்றுச்சீட்டு (Sl.No.91701 to 91704 வரை) ரூ.960/–க்கு விற்பனை செய்யப்பட்டது தொடர்பான முசிறி மோட்டார் வாகன ஆய்வாளரின் சான்று

மேலும், பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டில் 25.01.2018 தேதியில் குறிப்பிட்டுள்ளபடி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி ரூ.400/–ம், உதவியாளர் திருமதி.கலைச்செல்வி ரூ.370/–ம் அவரவரிடம் அவர்களது சொந்தப்பணம் சரியாக இருந்தது.

மேற்படி அலுவலகத்திற்குள் தனி நபர்கள் / இடைத்தரகர்களை அனுமதித்தது பற்றி மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி மற்றும் உதவியாளர் திருமதி.கலைச்செல்வி ஆகியோரிடம் தனித்தனியாக கேட்டதற்கு, இருவரும் முறையே சரியான காரணத்தை தெரிவிக்காமல் பதட்டத்துடன் மவுனமாக நின்று கொண்டிருந்தனர். மேலும், கீழ்கண்ட 7 ஆவணங்கள் மேற்படி காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

(1) முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் பணியாளர்கள் கையிருப்பு பதிவேடு 02.01.2018 முதல் 25.01.2018 வரை பதிவுகள் உள்ள பதிவேடு.
(2) முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் பணியாளர்கள் வருகைப்பதிவேடு 2018, 01.01.2018 முதல் 25.01.2018 வரை பதிவுகள் உள்ள பதிவேடு.
(3) முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் பணியாளர்கள் அனுமதி பதிவேடு 02.01.2018 முதல் 25.01.2018 வரை பதிவுகள் உள்ள பதிவேடு.
(4) முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் பணியாளர்கள் கணினி நிரளர் மற்றும் எல்காட் பணியாளர் வருகைப்பதிவேடு 01.01.2018 முதல் 25.01.2018 வரை பதிவுகள் உள்ள பதிவேடு.

(5) முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் ரொக்கப்பதிவேடு(2) 2018 பதிவேட்டில் 02.01.2018 முதல் 24.01.2018 வரை வரவு செலவு விபரங்கள் மற்றும் சுருக்கம் கணினியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு ஒட்டப்பட்ட நிலையில் உள்ள பதிவேடு.
(6) முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் ரொக்கப்பதிவேடு(1) 2018 பதிவேட்டில் 24.01.2018 தேதிய பக்கத்தின் பதிவுகள் மட்டும் உண்மை நகல்கள் (8 பக்கம்).
(7) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, வரவு பற்று சீட்டு 22.09.2017 முதல் 11.01.2018 வரை (வரவு பற்றுச் சீட்டு வரிசை எண்.91701 முதல் 91725 வரையுள்ள வரவு பற்றுச் சீட்டுப் புத்தகத்தில்) வரிசை எண்.91701 முதல் 91704 வரை மட்டும் முறையே ரூ.240/– வீதம் மொத்தம் ரூ.960/– மட்டும் வசூல் செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ள ரசீது புத்தகம் ஒன்று.

மேலும், மேற்கண்ட 7 தனிநபர்களிடமும் விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் மாலை 18.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் கூடிய திடீர் சோதனை செயல்முறைகளில் கண்டுள்ள தனி நபர்களான எதிரி (1) திரு.சுந்தர்ராஜ், (2) திரு.கார்த்திக்ராஜன், (3) திரு.பெரியசாமி, (4)திரு.மார்ட்டின், (5) திரு.முத்துக்குமார், (6) திரு.அருண்குமார், (7) திரு.பழனிச்சாமி மற்றும் மற்றும் (8)திருமதி.கலைச்செல்வி, உதவியாளர், அ1 பிரிவு, மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், முசிறி ஆகியோர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்–**01/2018** ச/பி 102 Cr.P.C மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 ச/பி 13(2) உ/இ 13(1) (d) ன்படி இன்று 26.01.2018 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.க.சத்யநாராயணன் அவர்கள் கொடுத்த 26.01.2018 தேதியிட்ட கடிதம் மற்றும் 25.01.2018 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையில் நகல் தொடர்புடைய ஆவணங்களை இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக திரு.ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, திருச்சி அவர்களிடம் ஒப்படைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.